ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2177/2 - 2020 මැයි මස 26 වැනි අඟහරුවාදා - 2020.05.26
2177/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழான அறிவித்தல்

*2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம், 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆம் திகதிய 2163/26 ஆம் இலக்க மற்றும் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 2153/29 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் திருத்தப்பட்டவாறான, 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிய 2147/72 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நிதி (மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசுவரி) ஒழுங்குவிதிகளில் 4 ஆம் ஒழுங்குவிதியினை இரத்துச் செய்து அதற்குப் பதிலாக பின்வரும் ஒழுங்குவிதியினை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.*

*“ 4. பின்வரும் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரியானது பூச்சிய சதவீதத்தில் (0%) ஏற்புடமையாக்கப்படுதல் வேண்டும் :-*

*(அ) 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் திறக்கப்பட்ட நாணயக் கடிதத்தினை அடிப்படையாகக் கொண்டு, குறித்த நாணயக் கடிதத்தில் அத்தகைய மோட்டார் வாகனத்தின் விபரம் மற்றும் அளவு, வாகனத்தின் தொழில்நுட்ப விவரக் குறிப்புக்கள், பெறுமதி மற்றும் காலாவதியாகும் திகதி என்பவற்றில் எதுவிதத் திருத்தத்தினையும் மேற்கொள்ளாதும், அத்தகைய மோட்டார் வாகனமானது, 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னரான திகதியொன்றில் இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்படுகையில்,*

*(ஆ) 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் திறக்கப்பட்ட நாணயக் கடிதத்தினை அடிப்படையாகக் கொண்டு, இறக்குமதி செய்யப்பட்ட 1,800 சி. சி. க்கு மேற்படாத உருளைக் கொள்ளளவினைக் கொண்ட பெற்றோலில் இயங்கும் ஏதேனும் மோட்டார் வாகனமொன்று அல்லது 2,300 சி. சி. க்கு மேற்படாத உருளைக் கொள்ளளவினைக் கொண்ட டீசலில் இயங்கும் ஏதேனும் மோட்டார் வாகனமொன்று*

அல்லது 200 கி. வோ. இற்கு மேற்படாத மின் பிறப்பாக்கி இயந்திரத்தினைக் கொண்ட மின் சக்தியில் இயங்கும் மோட்டார் வாகனமொன்று, குறித்த அதன் நாணயக் கடிதத்தில் அத்தகைய மோட்டார் வாகனத்தின் விபரம் மற்றும் அளவு, தொழில்நுட்ப விவரக் குறிப்புக்கள், பெறுமதி மற்றும் காலாவதியாகும் திகதி என்பனவற்றில் எதுவிதத் திருத்தத்தினையும் மேற்கொள்ளாதும், 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்படுகையில்,

(இ) 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் செலுத்தப்பட்ட முற்பணத்தினை அடிப்படையாகக் கொண்டு, உள்நாட்டில் பொருத்தப்பட்ட 1,800 சி. சி. க்கு மேற்படாத உருளைக் கொள்ளளவினைக் கொண்ட பெற்றோலில் இயங்கும் ஏதேனும் மோட்டார் வாகனமொன்று அல்லது 2,300 சி. சி. க்கு மேற்படாத உருளைக் கொள்ளளவினைக் கொண்ட டீசலில் இயங்கும் ஏதேனும் மோட்டார் வாகனமொன்று அல்லது 200 கி. வோ. இற்கு மேற்படாத மின் பிறப்பாக்கி இயந்திரத்தினைக் கொண்ட மின் சக்தியில் இயங்கும் மோட்டார் வாகனமொன்று, அது பெற்றோல், டீசல் அல்லது மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் வாகனம் ஆகியவற்றில் எதுவாக இருப்பினும், சுங்கப் பணிப்பாளர் நாயகம் திருப்தியுற்று, 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்படுகையில்,

ஆயினும், எவ்வாறாயினும், திறைசேரி செயலாளரானவர் மேலே குறிப்பிடப்பட்ட நாணயக் கடிதத்தின் உப பந்தி (அ) மற்றும் (ஆ) இல் ஏதேனும் திருத்தத்தினை மேற்கொள்ளலாம். அத்தகைய திருத்தமானது இறக்குமதியாளரின் நன்னம்பிக்கையினைப் பிரதிபலித்து பின்வரும் நிலமையின் கீழும் இருத்தல் வேண்டும்.

(i) நாணயக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள மோட்டார் வாகனமானது வர்த்தக நோக்கத்திற்காகவன்றி தனிப்பட்ட பாவனைக்காக மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) நாணயக் கடிதத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனமானது திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்திற்காக திருத்தப்பட்ட நாணயக் கடிதத்தினைச் சமர்ப்பிக்கின்ற நபரின் பெயரில் மாத்திரம் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(iii) மோட்டார் வாகனத்தின் முதற் பதிவுத் திகதியிலிருந்து (01) வருட காலத்திற்கு மோட்டார் வாகனத்தினை வேறொரு நபருக்கு கைமாற்றாதிருத்தல் வேண்டும்.

(iv) திருத்தப்பட்ட குறித்த நாணயக் கடிதத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக திறைசேரி செயலாளரின் ஒப்புதலுக்கான கோரிக்கையானது, குறித்த நாணயக் கடிதத்தினைத் திருத்துவதற்கான காரணங்கள் மற்றும் மேலே (i) ஆம் (ii) ஆம் மற்றும் (iii) ஆம் நிபந்தனை உட்சேர்ப்புக்களை நொத்தாரிஸ் சத்தியக் கடதாசி வடிவில் திறைசேரி செயலாளருக்கு மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்."

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2020, மே 26.

7- 126

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.